# கிறிஸ்துவுக்கு புகழ்

**அன்பின் வாசக நெஞ்சங்களே!**

மாசி மாதத்தில் பனி அதிகமாக கொட்டுகின்ற காலத்தில் பனியின் குளிரின் கொடுரத்தையும், அதன் தாக்கத்தையும் அனுபவித்து கொண்டிருக்கிறோம். குளிரின் தாக்கத்தினால் பலருக்கு நோய் தாக்கங்கள், அதிகரித்திருப்பதையும் அதனால் உடல் நிலைகள் சீரற்று நிற்பதையும் காணக்கூடியதாக உள்ளது. இவையெல்லாம் காலத்தின் கோலங்களாக உள்ளது என்று கூறலாம். இக்காலம் வழிபாட்டு காலத்தில் பொதுக்காலம். இக்காலத்தில் இறைவார்த்தைகள் இயேசுவின் பகிரங்க பணியை எடுத்துரைக்கின்றது. "ஆண்டவரின் ஆவி என்மேலே உள்ளது ஏனெனில் அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார்" என்று ஆண்டவர் இயேசுவின் பணிவாழ்வு ஆரம்பிக்கபடுகிறது. ஆண்டவர் இயேசுவின் பணிவாழ்வில் புதுமைகள், போதனைகள், மிகவும் முக்கியமாக இருந்தது. குறிப்பாக ஆண்டவரின் நோக்கம் இறை அரசை இவ்வுலகில் பரப்புவது. முழுமையாக இறையரசின் வளர்ச்சிக்காக தன்னை முழுமையாக தியாகம் பண்ணுகிறார். இறை அரசின் கருத்து என்ன? அதாவது இறைவன் ஆட்சி புரிவதாகும். சிறப்பாக அன்பு, சமாதானம், சமத்துவம், சகோதரத்துவம், போன்றவை உள்ளங்களில் மலரும் போது இறை ஆட்சி எம்மில் மலருகிறது என்பது தான் அர்த்தமாகும். நாமும் இறை ஆட்சியின் வரவுகளாக உழைப்போம். இறை ஆட்சியை கட்டியெழுப்புவோம்.

**நன்றி**

**அன்புடன்,**
**அருட்பணி யூட் நிக்ஸன்**
*Parish Priest*
*Our Lady of Deliverance Tamil Catholic Mission*